**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் - 2014**

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228- எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மகாண மட்டத்தில் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொடர்பில்லா தொற்றுநோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதை உறுதிப்படுத்துவதற்காக பொது மக்கள் சுகாதாரத்தின் செயலாற்றலின் நியமத்தை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியனாகும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகப் பட்டியல்படுத்தியிருந்தது.

## 1.3 ஒருங்கிணந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிங்கமைய தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளை தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு வடிவமைக்கும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், என்பவற்றை செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கை தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைய திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான சுகாதார அபிவிருத்தி திணைக்களத்தால் ஏற்பட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2014 திசெம்பர் 01 ஆம் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது கணக்காய்விற்கு சமர்ப்பித்த 2014 ஆம் ஆண்டிற்காக ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டு கணக்ககளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 150 ஆம் இலக்க நிதிப்பிரமாணங்கள் மற்றும் 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்ககள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டு கணக்ககள் திறைசேரி கணனி அச்சீட்டுத் தாள்கள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் மாகாண சபைகளால் பேணப்பட்ட புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் உடன்பட்டிருந்தன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 200 | 26,000 | 1,620 | 12.38 | 1,609 | 19.3 | 2,509 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 42,783 | - | 40,504 | - | - |
| | 200 | 26,000 | 44,403 | 12.38 | 42,113 | 19.3 | 2,509 |

செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் ஊடாக இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்ட ரூபா 4,565,844,351 மற்றும் ரூபா 39,837,987,701 ஆன முறையே மூலதன செலவினம் மீதான ரூபா 1,371,860,716 மற்றும் மீண்டெழும் செலவினம் மீதான ரூபா 918,759,821 ஆன தேறிய சேமிப்புகள் சகல 09 மாகாணங்களிலும் அறிக்கையிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் 16.6 சதவீதத்திற்கு மேலான தேறிய சேமிப்புகள் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சுகாதார திணைக்கத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த அதேநேரம் ஏனைய 08 மாகாணங்களின் மாகாண சுகாதார திணைக்களங்களிலிருந்தான ஒதுக்கீடுகளில் தேறிய சேமிப்புகள் 6 சதவீதத்தை விட குறைவாக இருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் செயற்திட்டத்தின் இடைநேர் விளைவு குறிகாட்டிகள் மாகாண மட்ட வைத்தியசாலைகளிற்காக 05 பிரதான விநியோக வழி குறிகாட்டிகளின் கீழ் அளவிடப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டன.மீளாய்வாண்டின் போது அத்தகைய குறிகாட்டிகளின் அடைதல் மீது கணக்காய்வில் செய்யப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 545 மாகாண வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான தர நியமங்களை 157 வைத்தியசாலைகள் மாத்திரமே பின்ப்றியிருந்தன. எவ்வாறாயினும், ஏனைய பகுதிகளுக்கு ஒப்பிடப்பட்டு கிராம பகுதிகளில் அவசர சிகிச்சை வசதிகளின் விநியோக குறைபாடுகள் கணக்காய்வில் வெளிப்பட்டது. 04 அவசர சிகிச்சை பிரிவு மாத்திரம் புத்தளம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள 34 மாகாண வைத்தியசாலைகளில் தாபிக்கப்பட்டிருந்தது அதேநேரம், 33 அவசர சிகிகச்சை பிரிவுகள் பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள 61 மாகாண வைத்தியசாலைகளில் தாபிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், உள்ளக நோயாளர் மற்றும் நோயாளர் திரும்பல பதிவேடு என்பவற்றின் ஊடாக உள்ளக நோயாளர் தரவினை உருவாக்கல் மற்றும் பரப்புதல் முறைமையை முன்னேற்றுவதற்கு செயற்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே, இணைய அடிப்படை தகவல் உரிய அமைச்சிற்கு வைத்தியசாலைகளிடமிருந்து அத்தகைய தரவுகளை மாற்றுவதற்கு

அமுலாக்கப்பட வேண்டுமென பிரிரேக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது இணைய தள தகவல் முறைமை அனுப்புகின்றதில் அடைவேண்டுமென 30 சதவீத ஒட்டு மொத்த முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்டதுடன் மாகாண மட்டத்தில் 33 சதவீத ஒட்டு மொத்த முன்னேற்றம் திருப்திகரமாக இருந்தது. எவ்வாறாயினும், தள அடிப்படை முறைமை ஊடாக தகவல் மாற்றுவதில் நுவரெலியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை, குருநாகல், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 10 சதவீதம் முதல் 28.8 சதவீதம் வரையான மெதுவான முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii) சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சுகாதார அமைச்சு உள்ளக நோயாளர் மற்றும் நோயாளர் திரும்பல் முறைமையின் அமுலாக்கலின் நோக்கத்திற்காக ரூபா 23 மில்லியன் கிரயத்தில் 236 கணனிகள் மற்றும் உபபாகங்களை கொள்வனவு செய்திருந்தது. கொள்வனவு நடைமுறை சந்தேகமான முறையில் அவற்றில் பிரயோகிக்கப்பட்டிருந்ததுடன் முறையற்ற கொள்வனவு நடைமுறை பிரயோகித்தமை காரணமாக மாகாண சுகாதார அமைச்சால் ரூபா 2.1 மிலலியன் மேலதிக கிரயம் ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) மனநல மற்றும் சிறுவர் சிகிச்சை நிலையங்களுடன் தொடர்புபட்ட ஆரம்ப தரவுகள் களுத்துறை மாவட்டத்தில் தேசிய மட்டங்களிற்கு அனுப்புவதற்கு மகளீர் மற்றும் சிறுவர் பராமரிப்பு போன்ற கீழ் மட்டங்களிலிருந்து முறைப்படி சேகரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகவே, மேல் மாகாணத்தின் அதிகாரிகளால் வழங்கப்பட்ட சுகாதார தகவல்களின் உண்மைத்தன்மை கேள்விக்குரியதாக உள்ளது.

(இ) கற்பிணி தாய்மார் மற்றும் 5 வயதிற்கு குறைந்த சிறுவர்களிற்கான தாய் சேய் சுகாதார சிகிச்சை நிலையத்தின் தர நியமங்கள் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணி பெண்களின் ஊட்டச்சத்தின்மை வீதத்தை குறைப்பதற்கு அவசியமான உபகரணங்கள் மற்றும் வசதிகளுடன் முன்னேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் செய்யப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு மீள அறிமுகப்படுத்தப்பட்டது.

(i) தாய்மார்களிற்காக மகப்பேற்றின் முன்னரும் பின்னரும் அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டப்பட்ட இல்ல வருகைகள், 13 உத்தியோகத்தர்கள் மாத்திரமே அத்தகைய பிரிவுகளிலுள்ள கடமைகளை மேவுவதற்கு சேவையில் உள்ளமையால் ஊவா மாகாணத்தின் வெலிமட பகுதியில் மருத்துவ உத்தியோகத்தர்களின் கீழ் 35 குடும்ப சுகாதார பிரிவுகளில் மீளாய்வாண்டின் போது திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் தாய் மற்றும் சிறுவர் பராமரிப்பு பிரிவுகளின் ஊடாக ''திரிபோசா'' விநியோகிக்கும் நேரத்தில் பல அவதானிக்கப்பட்டன. ''திரிபோசாவின்'' 3,345 பைகள்

காலாவதியான இருப்புகள் வெவஹம் மாவட்ட சுகாதார வைத்தியசாலை, பதுளை மாவட்டத்திலுள்ள வெலிமட மற்றும் ஊவா பரணகம பொது மருத்துவ அலுவலகங்கள் மற்றும் ஹம்பகா மாவட்டத்திலுள்ள மீரிகமின் பொதுமககள் சுகாதார அலுவலகங்கள் என்பவற்றில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்தது என அறிக்கையிடப்பட்டது.

(ஈ) மாகாண வைத்தியசாலைகள் மற்றும் மருந்து களஞ்சியங்களில் வினைத்திறனான மருந்து முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு உரிய அமைச்சால் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் திருப்திகரமாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) ஊவா மாகாணத்தில் வெலிமட தள வைத்தியசாலை, சப்ரகமுவ மாகாணத்தில் உடுகொட மாவட்ட வைத்தியசாலை மற்றும் மேல் மகாணத்தில் வத்துப்பிட்டிவெல தள வைத்தியசாலை என்பன மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கான தர நியமங்களை பின்பற்றாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருந்துகளின் இருப்புக்கள் இருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ii) ரூபா 18.07 மில்லியன் பெறுமதியான காலாவதியான மருந்துகளின் கருத்திற்கொள்ள வேண்டிய இருப்புக்கள் மருந்துகள் முகாமைத்துவம் மற்றும் காலாவதியான மருந்துகளிற்கான கைதவிர்ப்பு என்பவற்றிற்காக முறையான அறிவுறுத்தல்களின்மை காரணமாக நீண்ட காலமாக வடமேல் மாகாணத்தில் 04 வைத்தியசாலைகள், மேல் மாகாணத்தில் 03 வைத்தியசாலைகள் மற்றும் நுவரெலியாவில் மருந்துகள் வழங்கல்கள் பிரிவு என்பவற்றிள் களஞ்சியங்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்தது.

(iii) மேலும் 04 மாகாணங்களிலுள்ள 10 வைத்தியசாலைகளில் மீளாய்வாண்டின் போது அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறைவுகள் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(உ) கழுத்துச் சிகிச்சைப் பிரிவு, கரு கண்காணிப்பகம், குறுகிய அலை வெப்பச் சிகிச்சை, இருதய சிகிச்சை, எரி தொட்டி போன்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் கணனிகள், குளிரூட்டிகள், நிறுத்தல் இயந்திரம் போன்ற ஏனைய உபகரணங்கள் என்பன 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான கால வீச்சிற்கு மேலாக மத்திய, வட மத்திய, ஊவா மற்றும் மேல் மாகாண என்பவற்றிலுள்ள 19 மாகாண வைத்தியசாலைகள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாக பயன்படுத்தி இருந்தது.